வாக்குமூலம்

தலைமை குற்றவியல் நீதிமன்றம், இராமநாதபுரம்

வழக்கு எண் STC. No.556/2024

வழக்கு சாட்சி – PW – 1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | :: திரு. பிரபு | தொழில் | :: |
| த/க பெயர் | :: | வயது | :: |
| கிராமம் | :: | | |
| தாலுகா | :: | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day of 14.03.2025.

1, 2 எதிரிகள் ஆஜர்.

**முதன்மை விசாரணை** (நேரம் : காலை 10.55 மணி)

நான் தற்போது இராமநாதபுரம் சரகம் மருந்துகள் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன்.கடந்த 23.09.2020 அன்று இராமேஸ்வரம் அரசு மருத்துவமனைக்கு ஆய்விற்காக சென்றேன். ஆய்வின்போது மருந்தின் தரத்தினை அறியும் பொருட்டு எதிரிகள் நடத்தி வரும் க/எ.56/ 57 Industerial Area, Maxi road, Ujjain, M.P., என்ற முகவரியில் இயங்கிவரும் Osmed formulations Private Limited என்ற மருந்து தயாரிப்பு நிறுவனத்தால் தயார் செய்யப்பட்ட Salbutamol tablets IP 4 mg தொகுதி எண். TLS 906, தயாரிப்பு தேதி 8/2019, காலவாதியாகும் தேதி 07/2021 என்ற மருந்தை 073670 என்ற எண் கொண்ட 23.09.2020 என தேதியிடப்பட்ட படிவம்17 ன் கீழ் மருத்துவமனையின் தலைமை மருந்தாளுநர் திருமதி.ஏ.நளினி அவர்கள் முன்னிலையில் நான்கு பகுதிகளாக பிரித்து நன்கு கட்டி சீல் இடப்பட்டு RP/44/RMD/20 Dated. 23.09.2020 என மாதிரி எண் குறிக்கப்பட்டு நானும் தலைமை மருந்தாளுநரும் தேதியிட்டு கையெழுத்திட்டு பகுப்பாற்விற்காக எடுத்தேன். **படிவம் அ.சா.ஆ.1**. மருந்தின் மாதிரியின் ஒரு பகுதியையும் மற்றும் படிவம்17–ன் இரண்டாம் படியையும் தலைமை

மருந்தாளுநரிடம் ஒப்படைத்தேன். பின்பு RP/44/RMD/20 என எண்ணிடப்பட்டு 23.09.2020 என தேதியிடப்பட்ட படிவம் 18 தயார் செய்து சீல் இடப்பட்ட மருந்தின் ஒரு பகுதியை படிவம் 18 உடன் இணைத்து சென்னையிலுள்ள அரசு மருந்துகள் பகுப்பாய்வு கூட அரசு மருந்துகள் பகுப்பாய்வாளருக்கு அனுப்பி வைத்தேன். **படிவம் 18 அ.சா.ஆ.2.** பின்பு 26.11.2020 அன்று 04335-D/2020-2021, Dated. 05.11.2020 என்ற அறிக்கை எண் கொண்ட அரசு மருந்துகள் பகுப்பாய்வாளரின் அறிக்கையை படிவம் 13 ன் கீழ் பெற்றேன். அந்த அறிக்கையில் மேற்கூறிய மருந்தில் Salbutamol 74.25% மட்டுமே இருந்ததால் தரமற்றது என அரசு மருந்துகள் பகுப்பாய்வாளர் குறிப்பிட்டிருந்தார். **படிவம் 13 அ.சா.ஆ.3.** எனவே 27.11.2020 அன்று மருந்து மாதிரிகள் எடுக்கப்பட்ட இராமேஸ்வரம் அரசு மருத்துவமனையின் தலைமை மருந்தாளுர் திருமதி.ஏ.நளினி அவர்களிடம் மேற்கூறிய மருந்து யாரிடமிருந்து பெறப்பட்டது எனக்கேட்டு விளக்கம் கோரும் குறிப்பாணை ஒன்றை நேரில் அளித்தேன். அந்த **குறிப்பாணை அ.சா.ஆ.4** . அதற்கு அன்றே எழுத்துப்பூர்வமாக பதிலளித்த தலைமை மருந்தாளுநர் மேற்கூறிய மருந்தினை மாவட்ட மருந்து கிடங்கு, TNMSC, Ramanathapuram என்ற நிறுவனத்திடமிருந்து OGR No.NO16191650, dated.18.12.2019 என்ற எண் கொண்ட கொள்முதல் ரசீதின் மூலம் கொள்முதல் செய்ததாக குறிப்பிட்டு ஆவணங்களுடன் இணைந்த பதில் கடிதம் ஒன்றை அளித்தார். **பதில் கடிதம் அசா.ஆ. 5**. எனவே 28.11.2020 அன்று மாவட்ட மருந்து கிடங்கு பொறுப்பாளர், TNMSC, Ramanathapuram திரு.விஜயகுமார் அவர்களிடம் மேற்கூறிய மருந்துகள் யாரிடமிருந்து பெறப்பட்டது என கேட்டு விளக்கம் கோரும் குறிப்பாணை ஒன்றை நேரில் அளித்தேன். அந்த **குறிப்பாணை அ.சா.ஆ.6.** அதற்கு அன்றே எழுத்துப்பூர்வமாக பதிலளித்த மாவட்ட மருந்து கிடங்கு பொறுப்பாளர் திரு.விஜயகுமார் மேற்கூறிய மருந்தினை எதிரிகள் நடத்திவரும் Osmed Formulations Private Limited என்ற மருந்து தயாரிப்பு

நிறுவனத்திடமிருந்து Invoice No.322/2019–2020 dated.28.09.2019 என்ற எண் கொண்ட ரசீதின் மூலம் கொள்முதல் செய்ததாக குறிப்பிட்டார். மாவட்ட மருந்து கிடங்கு பொறுப்பாளர் கொள்முதல் ரசீது உள்ளிட்ட ஆவணங்களுடன் இணைத்து பதில் கடிதம் ஒன்றை அளித்தார். அந்த **பதில் கடிதம் அசா.ஆ.7.** மாவட்ட மருந்து கிடங்கு பொறுப்பாளரின் பதிலிலிருந்து எதிரிகளின் Osmed Formulations Private Limited என்ற நிறுவனம் தரமற்ற மருந்தை தயாரித்து விநியோகம் செய்தது தெரியவந்தது. அவ்வாறு தரமற்ற மருந்தை தயாரித்து விநியோகம் செய்தது மருந்துகள் மற்றும் அழகு சாதன பொருட்கள் சட்டம் 1940 பிரிவு 18(c) ன் கீழ் குற்றமாகும். ஆகவே 11.12.2020 தேதியிடப்பட்ட குறிப்பாணையை 14.12.2020 அன்று எதிரிகளால் நடத்தப்பட்டு வரும் Osmed Formulations Private Limited என்ற நிறுவனத்திற்கு தரமற்ற மருந்தை தயாரித்து விநியோகம் செய்தது மருந்துகள் மற்றும் அழகு சாதன பொருட்கள் சட்டம் 1940 பிரிவு 18(c) ன் கீழான குற்றத்திற்கு விளக்கம் கோரியும் மருந்து தயாரிப்பு உரிமங்கள் உள்ளிட்ட 15 வகையான ஆவணங்களை மருந்துகள் மற்றும் அழகு சாதன பொருட்கள் சட்டம் 1940 பிரிவு 18B ன் கீழ் சமர்பிக்க கோரியும் பதிவஞ்சலில் விளக்கம் கோரும் குறிப்பாணையை படிவம் 13 உடன் இணைத்து அனுப்பி வைத்தேன். அந்த **குறிப்பாணை அ.சா.ஆ.8**. மேலும் தனியாக மருந்து மாதிரியின் மூன்றாவது பகுதியை பதிவு பார்சலில் மருந்துகள் மற்றும் அழகு சாதன பொருட்கள் சட்டம் 1940 பிரிவு 24(4)(i) ன் படி அனுப்பி வைத்தேன். எதிரிகளின் நிறுவனத்திடமிருந்து பதில் ஏதும் வராததால் அவர்களுக்கு 21.01.2021 அன்று நினைவூட்டல் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்தேன். பின்பு 18.02.2021 அன்று எதிரிகளின் நிறுவனத்திடமிருந்து பதில் கடிதம் கிடைத்தது. அந்த **பதில் கடிதம் அ.சா.ஆ.9**. எதிரிகள் அளித்த பதில் கடிதத்துடன் மருந்து தயாரிப்பு உரிமங்கள் மற்றும் ஒரு பகுப்பாய்வு அறிக்கை மட்டுமே இணைக்கப்பட்டிருந்தது. குறிப்பாணையில் கேட்கப்பட்ட மற்ற ஆவணங்கள்

எதிரிகளால் சமர்பிக்கப்படவில்லை. இச்செயலானது மருந்துகள் மற்றும் அழகு சாதன பொருட்கள் சட்டம் 1940 பிரிவு 18B ன் கீழ் குற்றமாகும். எதிரிகளின் பதில் திருப்தி இல்லாததால்

1. Osmed Formulations Private Limited, க/எ.56/ 57 Industerial Area, Maxi road, Ujjain, M.P., பிரதிநிதித்துவம் பியூஷ் மகேஸ்வரி மற்றும் நிப்பூன் மகேஸ்வரி

2. பியூஷ் மகேஸ்வரி – இயக்குநர், Osmed Formulations Private Limited, க/எ.56/ 57 Industerial Area, Maxi road, Ujjain, M.P.,

3.நிப்பூன் மகேஸ்வரி – இயக்குநர், Osmed Formulations Private Limited, க/எ.56/ 57 Industerial Area, Maxi road, Ujjain, M.P., ஆகியோர் மீது 1. மருந்துகள் மற்றும் அழகு சாதன பொருட்கள் சட்டம் 1940 பிரிவு 18(c) r/w 27(d) ன் கீழும் 2.மருந்துகள் மற்றும் அழகு சாதன பொருட்கள் சட்டம் 1940 பிரிவு 18B ன் கீழும் வழக்கு தொடர அனுமதி ஆணை வேண்டி தமிழ்நாடு மருந்து கட்டுப்பாடு துறை இயக்குநர் அவர்களுக்கு 25.02.2021 அன்று முன்மொழிவு ஒன்றை அனுப்பி வைத்தேன். அந்த **முன்மொழிவு அ.சா.ஆ.10**. பின்பு தமிழ்நாடு மருந்து கட்டுப்பாடு துறை இயக்குநர் அவர்கள் எதிரிகள் மீது வழக்கு தொடர 6566/IW2/2021 dated.22.06.2021 என்ற எண் கொண்ட அனுமதி ஆணையை வழங்கினார் . அந்த **அனுமதி ஆணை அ.சா.ஆ.11**. பின்பு எதிரிகள் மீது மருந்துகள் மற்றும் அழகு சாதன பொருட்கள் சட்டம் 1940 பிரிவு 18(c) r/w 27(d) ன் கீழும், பிரிவு 18B r/w 28 A ன் கீழும் தனி புகார் தாக்கல் செய்தேன். பின்பு 26.07.2024 அன்று மருந்து மாதிரியின் 2 வது பகுதியை மாண்புமிகு நீதிமன்றத்தில் மருந்துகள் மற்றும் அழகு சாதன பொருட்கள் சட்டம் 1940 பிரிவு 23(4)(ii) ன் படி ஒப்படைத்து பி.ஆர் நம்பர். 27/2024 பெற்றேன். **பி.ஆர் நம்பர் 27/2024 ன் படி நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்ட மருந்து மாதிரியின் 2 வது பகுதி அ.சா.பொ.1.** நான் தாக்கல் செய்த தனி புகாரின் அடிப்படையில் எதிரிகள் மேற்படி பிரிவுகளின் கீழ் குற்றமிழைத்துள்ளதால் தக்க தண்டனை வழங்கும்படி பிராத்திக்கிறேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை** : இல்லை.

(ஒம்/– சி.மோகன்ராம்)
தலைமை குற்றவியல் நடுவர்,
இராமநாதபுரம்.